

பொய்யாமொழி

ஆசிரியர்_ ரா. பாஸ்கரனார்.

செய்யா மொழிக்குந் திருவள் ளுவர்மொழிந்த
'பொய்யாமொழி'க்கும் பொருளொன்றே—செய்யா
வதற்குரிய ரந்தணரே யாராயி னேனை
யிதற்குரிய ரல்லாதா ரில்.

கதிர் 1 | திருவள்ளுவர் ஆண்டு 1981, புரட்டாசி 11 (27—9—50) புதன்கிழமை. | மணி 5

மலைக்குச் சென்ற மங்கை

பே. க. இளங்கண்ணன்.

கனவான் தன்மகள் கைம்பெண் தன்னொடு
கனவள முடைய கருமலை எழிலைக்
கண்டுளாங் களித்திடச் சென்று ரங்கே
கண்டஅக் காட்சியே கவினுறு காட்சி:-
விண்ணில் வண்ணந் திட்டிய தொப்ப
கண்கவர் வனப்பொடு விளங்கின சிகரம்;
'தடதட' வென்று தண்ணீர் கொட்டும்
விடரிடைப் பாய்நீர் வீழ்ச்சிய தோர்பால்;
பல்லிசைக் கருவி பாண்செய லொப்ப
பல்வகைப் புட்கள் பரப்பின நல்லிசை;
வெங்குணம் வைத்து வேல்விழி வீசி
மேனி மினுக்கி ஆடுங் கணிகைபோல்
அருக்கன் பொன்னொளி அதனழ குயர்த்த
விரும்பு தோகையை விசிறிபோ லாக்கி
அருகிற் பெடைவைத் தாடிய தாண்மயில்;
மணிப்புரு விரண்டு பசுமரக் கிளையில்
மகிழ்ந்து குலாவி மருகியின் புற்றனர்;
மரையினங் கூடின; மகிழ்ந்துபா லூட்டின;
மழலைப் புட்கிரைத் தாய்ப்புள் கொடுத்தது;
இனியதண் தென்றல் நன்மணம் பரப்ப,
இன்மது வுண்டளி இன்றமி ழிசைத்தன
இஃதெலா மொருங்கே இன்ப வுணர்ச்சியை
எழுப்பின மிகவாய்; இளம்பெண் நொந்தாள்
தன்னொ டொத்தார் வாழ்ந்த வாழ்வையும்
தன்னிடந் தவழ்ந்த தாழ்ந்த வாழ்வையும்
உன்னிக் கண்ணீர் உகுத்தாள்; உள்ளம்
உள்ளே குமுறுமோர் எரிமலை யானது;
மண்டிய துளத்துள் மட்டிலாப் புழுக்கம்;
மறந்தது உள்ளம் தனித்துயிர் வாழ
மலைவளந் தன்னில் மனதினைச் செலுத்தி
மகிழ்வுபூத் திருந்தார் மட்டிலா எண்ணம்
மலர்ந்தன; மறைந்தன; மகள்பரு வத்தில்
தலைவனை இழந்து தனிமையில் வாடிய
எண்ணமும் மலர்ந்தது; மல்கினர் புன்கணீர்.
எங்கோ 'திடீ'ரெனும் பேரொலி கேட்க,
துடித்தெழுந் தோடினர்; அருவிபால் நோக்கினர்;
அடித்துச் சென்றது அருவிதன் மகளை
கண்டா ரவளைக் காத்திட எண்ணிக்
கடிதிற் குதித்தார் கறங்குவெள் ளருவியில்!
தேடினர் மகளைசெய்வ தறியாது
ஏகினன் நீர்வழி! என்சொல!
வேகநீர் விழ்ச்சி விரைந்தோ டியதே!

வார இதழ். ★ விலை அணா 1.

வாழ்த்துச் செய்திகள்

தமிழ் வாழ்க!

ஐயா,

தாங்கள் ஆரம்பித்திருக்கும் "பொய்யாமொழி" என்னும் வார பத்திரிகையை நான் கண்டு மகிழ்வதோடு

உலகமக்கள் ஒருகுலமென உணர்ந்து
இலகுவான இம்மொழியை ஏற்றதென வியம்பி
கலகமிலா கடவுள்தனை கண்டறிவு துலங்கும்
தூய வாழ்வு வரும் வரையில்,

தன்னினம் மொழிகளை நாகரீகம்
கண்போல் காத்துவந்த வீரமிக்க
உன்நாடு உனக்கினிமை யாக்கி
நல்லபொன் மொழிகளை பின்பற்றி
முயற்சிவிடாது முறையான கல்விகற்றும்
அயர்ச்சி யிலாது தனிஉடமைதனை
பொதுவாக்கி உயர்வுவாழ்வு அகற்றி
உன்னத சமுதாயமாக்க பொய்யாமொழி

வாழ்க வாழ்கயென வாழ்த்துகிறோம்.

V. P. ராதா, கோட்டியால்.

ஃ ஃ ஃ

K. N. இராமச்சந்திரன்,
முதல் வகுப்பு, அரசினர் கல்லூரி,
குடந்தை.

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு!

வணக்கம்!

"பத்திரிகை என்பது காலத்தின் கண்ணாடி! மக்களின் வாழ்வை மாண்புறச் செய்யும் மகத்தான நீதிபதி! நீதியைப் போற்றியும் அநீதியைக் கண்டித்தும் நாட்டிற்கு தொண்டாற்ற வேண்டியது, அதன் கடமை" என்ற பேரறிஞர்களின் பொன்மொழிகேற்ப, தங்களின் பத்திரிகை மக்கள் மன்றத்தில் மாண்புடன் விளங்குவது கண்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

கருத்தற்ற, கண்ணியமற்ற, கொள்கையற்ற, பச்சோந்தி போஸ்டர் பத்திரிகைகளைப் போலல்லாமல் தமிழர்களின் தன்மான வாழ்வைச் சுருங்கச்சொல்லி விளங்கவைத்த வள்ளுவப் பெருந்தகையின் நூலின் பெயரால் "பொய்யாமொழி" என வருவதுகண்டு பூரிப்படைகிறோம்! போற்றுகிறோம்!! வரவேற்கிறோம்!!! வாழ்த்துக்கூறுகிறோம்!!!!

ஆம்! பொய்யாமொழிதான்!

தேசத்தின் விடுதலைக்காகப் பாடுப்பட்ட தியாகி என விளம்பரப் படுத்திக்கொண்டு, கதர் சட்டை மாட்டி கள்ள மார்க்கட்டிலே கொள்ளை லாபமடிக்கும் கயவர்களின் கண்மூடித்தனத்தைக் கண்டிக்கும் பொய்யாமொழி! பட்டப்பகலிலே; பரலோகத்திலுள்ள நமது தாய் தந்தையர்களுக்கு பச்சரிசியும் பசுங்காயும்அனுப்ப பக்தியோடு பாதத்தில் விழ்ந்து பணிந்து வழங்க வேண்டுமென்று படுபாதகச் செயல்புரியும் கூட்டத்தின் கொட்டத்தை பகிரங்கப்படுத்தும் பொய்யாமொழி! "ஆங்கிலேயரிடம் அநேக ஆண்டுகளாய் அடிமையாகவிருந்தோம் ஆனாலின்று விடுதலைப் பெற்றுவிட்டோம்", என்று வெட்கமின்றி கூறிக்கொண்டு அன்றாடம் ஆறு அவுன்ஸ் அரிசிக்கு மக்களை அவதிக்கும், அல்லலுக்கும் ஆட்படுத்திவரும் ஆட்சிப்பிடமேறிய அலங்கார உருவங்களின் அட்டூழியத்தை அம்பலப்படுத்தும் பொய்யாமொழி! உல்லாசபுரியில் சல்லாபமாக வாழும் பணக்கார கூட்டத்திற்கும் உழைத்துழைத்து, உடல் மெலிந்து, உள்ளம் நலிந்து, இன்னலுக்கிலக்காகி, அல்லலுக்காட்பட்டுபயன்காணாது பரதவிக்கும்பாட்டாளி மக்களுக்காகப் பரிந்து பேசும் பொய்யாமொழி!

இன்பத்திராவிடமே எமது இலட்சியமெனக் கொண்டு, தம் அறிவின் திறத்தினால் மாற்றாரையும் மண்டியிடச்செய்து, சுதந்தரமான' சொகுசான வாழ்வில் காலத்தைக் கழித்துவந்த கல்லூரி மாணவ, மாணவிகளை முத்தமிழ் காக்கும் முன்னேற்றப்படை வீரர்களாக ஆக்கி எண்ணற்ற சொற்போர்வீரர்களைத் தம்பியாகக் கொண்டு, பலரின் பாராட்டுதலோடு திராவிடத்தில் எங்கணும் வாகை மாலை சூடிவரும் "அறிஞர் அண்ணா"'வின் கொள்கையைப் பின்பற்றும் பொய்யாமொழியாக விளங்கவேண்டுமென தங்களை ஆசிரியராககொண்டுவரும் பத்திரிகையை எதிர்பார்ப்பதில் தவறில்லையென எண்ணுகிறேன்.

விடுதலை வேட்க்கைக் கொண்டோர்! வேதனையைப் போக்க முன்வரும் விவேகிகள், மாணவமணிகள் அனைவரும் படித்து பயன்பெற வேண்டிய பத்திரிகை பொய்யாமொழி!

வெல்க திராவிடம்! வாழ்க தமிழ்!!

ஃ ஃ ஃ

ஆசிரியர் அவர்களுக்கு,

நினது உயரிய பொய்யாமொழிகன்ற கருத்து நிறைந்திலங்கும் மங்கல மடலை போற்றுகிறேன். பொது மக்கட்கும்-விவசாயி பாட்டாளி-தொழிலாளர் குற்றம் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதுடன் அவர்கள் வாக்கை வெளியிடவும், அவர்களுக்கு மதி—மந்திரியாய் இருந்து ஆவன செய்து கருணை பெருக்கால் பூதலமீது புகழ் பெற்றுய்ய பல்லாண்டு வாழ்க, வாழ்க.

முசிரி
18—9—50

சி. சோமசுந்தரம்.
டி. மு. கோர்ட்டு புரோசசர்வர்.
அரியலூர்.

மாணவர் இலக்கிய மன்றம்

நாட்டாண்மைக்கழக உயர்நிலைப்பள்ளி,

ஜெயங்கொண்டசோழபுரம்.

★

மேற்படி இலக்கியமன்றத்தின் கீழ்ப்பிரிவு மாணவர்களின் பொதுக்கூட்டம், 20—9—50 புதன்கிழமை பிற்பகல் 4மணிக்கு பள்ளித் தலைமையாசிரியர் திரு அ. ஆரோக்கியசாமி, பி. எஸ்ஸி பி. டி. தலைமையில் நடைபெற்றது. பள்ளித் தலைமை தமிழாசிரியர் திரு புலவர். ப. அரங்கசாமி அவர்கள் "மாணவர் கடமை" என்பது குறித்துப் பேசினார்கள். தொடர்ந்து சில மாணவர்களும் பேசினர். தலைவர் முகவுரைக்குப்பின் செயலாளர் லூர்துசாமியால் நன்றி கூறப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது.

ஃ ஃ ஃ

டிை இலக்கிய மன்றத்தின் மேற்பிரிவுக் கூட்டம் 22—9—50 பிற்பகல் 4மணிக்கு பள்ளியின் புதிய தலைமையாசிரியர், திரு. இராமரத்னம் அய்யர் பி. ஏ. எல், டி தலைமையில் நடைபெற்றது.

புலவர், ப, அரங்கசாமி அவர்கள் "வாழ்வும் வழியும்" என்ற தலைப்பில் சொற்பொழிவாற்றினார்கள் அதனைத் தொடர்ந்து பள்ளி இறுதிவகுப்பு மாணவன் சு. நாகராசுலு பேசினார்.

தலைவர் முடிவுரை கூறியபின் செயலாளர் ரெ ஆளவந்தார் நன்றி கூறக் கூட்டம் நிறைவுற்றது.

ஃ ஃ ஃ

★★★★★★★★★★★★★★★★★

மறைந்த மலைக்கு மாணவர் மரியாதை.

ஜெயங்கொண்டம் நாட்டாண்மைக்கழக உயர்நிலைப் பள்ளி மாணவர் இலக்கிய மன்றத்தின்சார்பில் 18-9-50 திங்கள் மாலை 4மணிக்கு டிை பள்ளித்தலைமையாசிரியர் திரு. அ. ஆரோக்கியசாமி, பி எஸ் ஸி பி டி. அவர்கள் தலைமையில், மறைமலையடிகள் மறைவுகுறித்து இரங்கற்கூட்டம் நடைபெற்றது.

அடிகளாரின் தமிழ்த்தொண்டு, பண்பு, பன்மொழி அறிவு, நூலாராய்ச்சி, சீர்திருத்தக்கோட்பாடு, ஆக்க வேலை, வாழ்க்கைமுறை முதலியன குறித்து, பள்ளித் தமிழாசிரியர்கள் திரு, புலவர், சி. பூவராகசாமியும் புலவர் ப. அரங்கசாமி ஆசிரியர் திரு, S. நடேச (படையாச்சி) அவர்களும் எடுத்துக்கூறினர்,

பின், பொதுச் செயலாளர் ரெ, ஆளவந்தார் அநுதாபத் தீர்மானம் ஒன்றைப்படிக்க, அனைவரும் எழுந்துநின்று அமைதியாக சிலநிமிடம் இருந்தபின்னர் கூட்டம் கலைவுற்றது.

★★★★★★★★★★★★★★★★★

மந்திரி சந்திப்பு.

கனம், மராமத்துமந்திரி அவர்கள் 24—9—50 திருச்சி வருவதுதெரிந்த காலை அங்குசென்று பொய்யாமொழி ஆசிரியர் பாஸ்கரனும், ஜெயங்கொண்டம், டவுன் காங்கிரஸ்கமிட்டி செயலாளர் அ. இ. காதர்கான் அவர்களும் அன்றுகாலைமுதல் எதிர்பார்த்து திருச்சி ரிடயரிங்ரூமில் இரவு 10-மணிக்கு மராமத்து நீர்பாசன மந்திரி ஸ்ரீ. பக்தவத்சலம்அவர்களை நேரில்கண்டு பொன்னேரியில் தண்ணீரை தேக்கும் ஷட்டர்ஸ் (மூடியானது) சரியில்லாமல் தினம் சுமார் 2அடி தண்ணீர் விதம் வெளியே ஓடிவிடுவதால் பருவமழைதவறி வேண்டும்போது தண்ணீரின்றியும், விளைச்சலுக்கு குந்தகம்ஏற்பட்டு வருவதை திருத்தி சரிசெய்து கொடுக்க வேணுமென்று கேட்டபோது அப்படி தண்ணீர் வீணாக போய்விடவில்லைஎன்று அசிஸ்டெண்ட் எக்சிகூட்டிவ் இன்ஜினியர் தான்போய் 10நாளைக்குமுன் பார்த்ததாயும் தண்ணீர்வீணாக நஷ்டமாகும்நிலையிலில்லை அதுசாதாரண (லீக்கேஜ்) மாய் இடுக்கில் ஓடக்கூடியது என்றும் சொன்னார். அதுபற்றி ஆசிரியர் பொன்னேரி ஆயக்கட்டு பட்டாதார்களைக்கொண்டு மனுகொடுத்து கனம் மந்திரி அவர்கள் உணர்ந்து எண்ணும்படி செய்வதாய்சொன்னார் பின்னர் புதுக்குடி பெரியஏரியின் திட்டத்தை விபரமாய் எடுத்து கனம் மந்திரிஅவர்களிடம் விளக்கியபோது அது சம்பந்தமாய்தனக்கு மனுஎழுதும்படி தி ஜி எக்சிகூடிவ் என்ஜினியர்அவர்கள் சொன்னார் அதன்படி மனுவும் பகஜரும் தங்களுக்கும் கனம் மந்திரி அவர்களுக்கும் அனுப்பதவதாயும் சொன்னபோது தான் கவனித்து உடன் செய்வதாய் கனம் மந்திரி அவர்கள் வாக்களித்துள்ளார்கள்,

ஆகையால் ஜெயங்கொண்டம் தென்பாகம் தேவாமங்கலம் முதல் வடக்கே கருக்கை ராங்கியம் திருச்சி ஜில்லாவில்முடிய உள்ளதும் அதற்கு கிழக்கு பிராந்தியத்தில் உள்ள விவசாயிகளும் உடனே அங்காங்கு கூட்டங்கள்போட்டு மனுக்களும், தீர்மானங்களும், போடவேண்டியது அவசியமாகிறபடியால் டிை கிராம மக்கள் உடனே ஆவனசெய்ய ஜெயங்கொண்டம் பொய்யாமொழி வாரஇதழ் ஆசிரியர் M. பாஸ்கரனிடம் வந்து தங்கள் தங்கள் ஊர்களில் கூட்டம்போடும் தேதியை கலந்து முடிவுசெய்து போகுமாறு கேட்டுக் கொள்ளுகிறோம்.

பொய்யாமொழி

வார இதழ்

சந்தா விபரம்

ஆண்டு	ஆறு மாதம்	தனிப்பிரதி
3 0 0	1 12 0	0 1 0

கதை, கட்டுரைகளில் காணப்படும் பெயர்கள், யாவும் கற்பனையேயன்றி யாரையும் குறிப்பிடுவன அல்ல.

பொய்யாமொழி
ஆசிரியர்: ம. பாஸ்கரனார்

கதிர் 1 } 1981, புரட்டாசி 11 புதன். { மணி 5

"இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு"

மெய்மையான புகழை விரும்பும் தலைவரிடத்து மயக்கத்தைத்தரும் நல்வினை தீவினை என்னுமிருவினைகளும் உண்டாகமாட்டாது.

திராவிட முன்னேற்றகழகத்தின் வயதும் - நிலையும்.

★

தி. மு. கழகம் தொடங்கியது 17—9—49 ல் 16—9—50 உடன் 1 ஆண்டு முடிந்து இரண்டாம் ஆண்டு துவங்கிய 2-ம் நாள் பொதுக் காரியதரிசியுமான அறிஞர் அண்ணாதுரையவர்களை அயர்ந்துவிடாமலிருக்க எண்ணிய நம் அரசாங்கம் சுடர் விளக்குக்கு தூண்டுகோல் என்ற 153-Aயை எடுத்துவீசி அணையாமல் பாதுகாக்க பல ஆயிரம் தம்பிமார்களும் ஆரம்ப சூரத்தனமாய் அயர்ந்துவிடாமலிருக்கவும் எண்ணிய நமது அரசாங்கம் நிந்தாஸ்துதிபோல் நமது நாட்டு மக்கள் நால்வருணம் சூத்திரன் சாதி மேல் கீழ் என்றிருப்பதை சமபடுத்தவேண்டிய அவசியம் ஏற்பட்டபோது பொது மக்களின் உள்ளங்களை பரீட்சை செய்ய எண்ணி பொது மக்களின் பெருவாரியானவர்களின் ஆதரவோடு மக்களின் குரலை ஆதாரமாக முன்வைத்து ஏழை என்றும் அடிமை என்றும் எவனுமில்லை ஜாதியில் என்ற குறிக்கோளை நிறைவேற்றி தீரவேண்டியவர்கள் நாட்டுமக்களின் சமுதாயநிலையை சமத்வபடுத்த அக்கரைக்கொண்டு பெருந்தொண்டு புரிந்துவரும் பெரியார் — அண்ணா இருவர்களின் நன்முயற்சியும் தொண்டர்களின் ஒத்துழைப்பையும் கொண்டே நடத்தி புகழடையட்டும் என்று நன்னோக்கோடும் இந்நாட்டையாண்ட மறவேந்தர்கள் மரபில் வந்த மதி மந்திரிகள் இந்த வாய்ப்பை சமத்துவம் செய்யும் புகழை அவர்கள் தங்களுக்களித்தமையை

"காலத்தினாற் செய்த நன்றி சிறிதெனினும்
ஞாலத்தின் மாணப் பெரிது"

என்ற செய்யுளை ஞாபகப்படுத்திக் கொண்டால் இரண்டாம் ஆண்டு துவக்கநாளில் செய்த இந்த பேருதவியைக்கொண்டு வளரும் வாய்ப்பை முற்றிலும் பெறும் என்பது. சுடர்விளக்கு சுடர்விட்டு எரியும் பேற்றை பெருமென்பது சந்தேகமற்றவாறு.

ஃ ஃ ஃ

பிணம் பேசினால்...!

என்னசெய்யும் தன்னுடைய மனைவியை அன்றைய முதல் நாளிரவு குலவிய மங்கையை நினைப்பதும் வாலிப மங்கையாயிற்றே அன்றையவரை தன்னுடன் சரச சல்லாபமாடி கருத்தொருமித்து இருவரும்பொதுஇன்பம் நுகர்ந்த காரிகையாயிற்றே இனி என்ன செய்வாள். அவளின்ப உணர்ச்சியால் ஏற்படும் இயற்கை சம்பவங்களுக்கு இரையாகி விடாமலிருக்க எப்படி முடியும் எப்படியும் இயற்கை அவளை சும்மாயிருக்கவிடாதே ஆண்கள் ஐம்பது வயதானாலும் மனைவியுடனிருக்க குழந்தைகளைக் காப்பாற்ற குடும்பம் தேவை என்ற சாக்கை வைத்து தன்னுடைய உணர்ச்சிக்காக மறுதாரம் விவாகம் செய்ய துடியாய் துடித்து. மனைவி இறந்த அன்றுமுதல் கருமாதி செய்யும் நாளைக்குள் மற்றொரு, மனைவிக்கு வேண்டிய வகைகளை தேட ஆண்கள் பலரும் ஒத்துழைத்து உறுதுணை செய்கின்றார்களே அவ்வாறிருக்க துணையிழந்த பெண்களுக்கு காதல் போய் போ சுகம்வேண்டாதிருப்பதுண்டோ அவர்களுள்ளம் கன்னிலொன்றை பழுது செய்தால் நியாயமா? காம விகாரத்தால் மோதுண்ட கன்னிகைக்கு துணையாய் அங்கு நிகழ்ந்து நிற்கும் அக்குடும்பம் பஞ்சும்—நெருப்பும்போல் தாயும்—தந்தையும்தனியறையில், தமையனும்—அண்ணியும் மற்றோர் அறையில், தம்பியும்—அவன் மனைவியும் மற்றோர் அறையில் அவரவர்கள் தனித்தனியே தங்கியிருப்பதை நினைக்க நினைக்க தானும்—தன் கணவனும் இருந்ததை எண்ண எண்ண பருவகாலவுணர்ச்சி என்ன செய்யும் முதிர்ந்த முனிவர்களையும் அன்றைய நல்ல யுகங்களாகிய கிரேதா, திரேதா, துவாபர யுகங்களில் கூடவிடாத காமவுணர்ச்சி பருவத்தின் கோளாறுதாண்டி வயோதிகத்திலும் கூட ஆண்களை விடாமல் விரட்டியடித்ததாக சொல்லும் பஞ்சபாணம் (மன்மதக்கணை) 40 வயதுக்குமேல் திருமணம் நடத்தி அதற்கும் சாந்தி முகூர்த்த அறையில் புரோகிதரால் கூறிய 21 விரல் போன்ற வஸ்துவை தொப்புளின்கீழ் சாண் அளக்க சொல்லிவைத்து வந்த அந்த காலத்திலேயே பருவக் கோளாறுகாரணமாய் சும்மாயிருக்க முடியாமல்

19

ஒரு சுந்தரமூர்த்தி சுவாமிகளே சங்கிலியார் என்ற விதவையை மறுதிருமணம் செய்துகொண்டதாக சாஸ்திரம் எழுதி வைத்துவிட்டு, அதே நிலமையில் தலைவிதி என்றும், கர்மா என்றும், பிராரத்துவம் சொல்லி இளம்பெண்ணை கைம்பெண்ணாக்கி கைம்பெண்களின் விரக வேதனையைத் தவிர்க்க முடியாத நிலையில் மற்றய பெண்களுக்குரிய வாசனைதரும் மலரையும் அழகிடும் இன்றைய போன்றதும் மேக்கப் மஞ்சள் குங்குமம் சாமான்களையும்; அண்டவொட்டாமல் ஆண்களாகிய நீங்கள் செய்ய தலைப்பட்டீர்களே யொழிய உங்கள் ஆண்டவனில் ஒருவராகிய முத்தொழில் கர்த்தா பிரம்மா சும்மாயிராமல் சிருஷ்டிதொழிலை வரமாய் வரம் வாங்கி தவம்கிடந்து ராமேஸ்வரம் செல்லும் புக்தகோடிகளுக் களிக்கமன மற்று ஏழை விதவை அனாதை பருவத்தால், உண்ணும் உணவால் ஏற்படும் மலக்கழிவை ஒத்த விந்துவை கழிக்க மார்க்கமின்றி மற்றையவர்கள் ஈடுபட்டு அனுபவிக்கிறதும் ஒருகாலத்தில் தான் அனுபவித்த எல்லையற்ற அளவிலடங்கா இன்ப நுகர்ச்சியை தானடைய எண்ணிய அஞ்ஞான்று அவசரத்தந்தியடித்து ஏன் டெலிபோனில் கூப்பிட்டதுபோல் சிருஷ்டிகர்த்தா அங்கு தயாராய் நின்று சிசுவை வெளிதெரியாமலழிக்க பல மருந்துகளின் உதவியால் சிலமாதங்களிலேயே அழிக்க வேண்டியதை செய்தும் முடியாமல் தவிப்பதும் இன்றைய அரசாங்க சட்டத்தின் துணைகொண்டு அந்த கைம்பெண்ணையும் அவர்களின் பெற்றோர்களை காற்றல் தூற்றி அவமானபடுத்த எண்ணும் பிரம்மாவின் அத்யந்த பக்தர்களும் அவர்களுக்காக செய்துவைத்துள்ள கிரிமினல் குற்றங்களும் உடனே போலீசின் பாதுகாப்புகளும் ஏற்படுத்தி கெற்பத்தை யழிக்காமல் பாதுகாக்க பந்தோபஸ்த்துகளும் ஏற்படுத்தி குழந்தையை வெளிவரும் வரையில் காத்து பிறகு சமுதாயம பழித்து சாதிகட்டுபாட்டுக்குள் ஒதுக்கி வைத்து சொத்திலுள்ள பங்கை இழக்கச்செய்து சமுதாயத்திலும். ஒதுக்கி வைத்து பிழைக்கவும் வழியற்று வேற்றாரில் விபசாரம் செய்யும்படி செய்து வயிர் பிழைக்கும்படி செய்து பிறந்தும் வளர்ந்தால் விதவையின்—விபாசாரி பிள்ளை என்று பட்டம் சுமத்தி நாணும்படியாக் கிவைக்க சட்டமிருக்கிறதேயொழிய, அப்பேர்பட்ட இளம் விதவிகளை திருமணமும் செய்துகொடுக்க சட்டமும் செய்யாது. தன் பருவவுணர்ச்சியால் விரக வேதனையால் ஏற்பட்டு தானே பெற்ற பிள்ளையை அழிக்கமட்டும் முடியாத சட்டம் செய்த சட்டமன்றத்தார் ஆண்களானதினாலும் பெண்களின் நிலையை உணராதவர்களானதினாலும், கஷ்டபட்டு சுமந்து பெற்ற காப்பாற்ற சொத்துரிமையும் சமூக கட்டுப்பாடு என்ற அநீதியால் மறுமணம் செய்ய உரிமையும் சட்டம் செய்ய வக்கும் மன இருளும் வகையுமற்றும் முதல்தார புருஷனின் மக்களிடையிருந்தால் அவர்களை பாதுகாக்க சட்டமியற்றாமல் அனாதைக் குழந்தைகளுக்கு உரிமையளித்து அவர்களுக்கு இலவச கல்வியும், கட்டாய வேலை கொடுக்கும் சட்டமும் செய்யாபல் அனாதை விடுதியாம் அதிலும் சிபார்சு பிடிக்கும் வகையில்வைத்து முதல்தார குழந்தைகளிருப்பின் அக்குழந்தைகளுக்கு கல்வியில் ஹாஸ்டலில் முதன்மை யளித்தும் காப்பாற்றி முதன்மை ஸ்தானகளுக்கு பூர்த்திசெய்துவைக்கவேணுமென்று ஏன் எண்ணவில்லையோ? நம்நாட்டு சமூக அமைப்பை யுணர்ந்த நமது அமைச்சர்கள் அது விஷயத்தில் கவலைக்கொள்ளாதது சரியா? என்று எண்ணுவான் அவர்கள்செய்யும்வரையில் எண்ணி மரணசாசனம் எழுதினால் சொத்தில்லா தன் மகனை மகளை படிக்கவைத்து வேலைதேடி வயிறு வளர்க்க எண்ணம் உண்மையில் கொண்டவனானால் இன்றைய சட்டப்படி மக்களை தியவழியில் செலுத்த விடக்கூடாத மனமுடையவனாயினும் கள்ளாமைபகுதியில் வள்ளுவர் குறளின்படி

"எள்ளாமை வேண்டுவா னென்பான் எனைத்தொன்றுங்
கள்ளாமை காக்க தன்னெஞ்சு"

யாதொரு பொருளையும் திருட நினையாதபடி தன்னை நெஞ்சைக்காத்தவன் திருடுவோரை உலகத்தோர் இகழ்வார் என்று நன்கறிந்த ஒன்றை தன் மக்களை செய்யும்படி செய்தால் இன்றைய சட்டப்படி மைனர் குழந்தைகளுக்கு காப்பாற்றும் வசதி இங்கேயுமிருக்கிறதென்று தெரிந்த நேரத்திலே அனாதையாய் பிச்சையெடுத்து சாகும்படி விட எண்ணமில்லாமல் குழந்தைகளே நீங்கள் மைனர்கள் திடினால் திருடிபிறகு திருடியதை மறைக்காமல் ஒத்துக்கொண்டால் சர்க்காரிலே உங்களை நீகட்டாயமாய் சோறுபோட்டு படிக்க வைத்து வேலைக்கொடுத்து காப்பாற்றும்படி சட்டமியற்றிருக்கிறது ஆனால் நிரபராதிகளாய் வாழ எண்ணினால் சட்டமும் உங்களுக்கு துணைபுரியாது கல்லுக்குள் தேரைக்கும் கருப்பைக்குள் முட்டைக்கும் நீங்கள் படியளந்து காப்பாற்றுவதாக எண்ணும் உங்கள் கடவுளும் கைவிட்டுவிடும் நீங்கள் "ஏற்பதிகழ்ச்சி" என்று கருதினால் பிச்சை எடுக்க நம் ஒப்புயர் வற்ற கடவுள்களின் பெயர்களைச் சொல்லி பிச்சைஎடுப்பது கடவுளர்களுக்கு இழுக்குதரும் செயல் என்று கருதினால் ஒரேவழி திருடுவதும் அதை ஒத்துக்கொண்டு போலீசார் உங்களை பிடிக்கும்படி ஜெயிலுக்குப் போய் உங்களுக்காக ஒதுக்கப்பட்டிருக்கும் சலுகையை யடைந்து படிப்பும் கட்டாய வேலையும் பெற்று சுகமே வாழுங்கள் என்று செல்வி மனைவியையும் உன்னைவிட்டு நான் பிரிந்ததால் இவ்வுலகில்மக்களுக்காக ஏற்படுத்தப் பட்டுள்ள இயற்கை வசதிகளை நீ அடைந்து என்னை மறப்பாயாக. உன்னை இழந்தால் ஆண்கள் எவ்வாறு திருமணம் செய்து இயற்கை இன்பத்தின் உணர்வை அனுபவித்து வருகிறார்களோ, அவ்வாறே பெண்களாகிய நீங்களும் அடைவதில் தடையுள்ள எந்த சமூக சமுதாயத்தையும் லெக்ஷியம் செய்யாதீர்கள் உரிமையை இழக்காமல் உறுதியாய் ஒருவனை மணந்து உள்ளன்புடன் வாழுங்கள். சமுதாய சழுக்கர்களின் ஒருதலைபக்ஷத்தீர்ப்புகளை உடைத்தெரியுங்கள் வீணே சிசுகர்த்தி முதலிய கொலை, கொடுமை, வ்பசார வாழ்க்கை செய்வதையறிந்தும் பிறர்நேரேசொன்னால்கோபிப்பதும் தன் சிந்தனையற்றதுமான மூடப்பழக்க வழக்கங்களை சமூகக் கொடுமைகளை ஒழித்துகட்டுங்கள், விதி, என்றும் விதவை என்றும் சகுனத்தடை என்றும், ஒதுக்கித்தள்ளும் உங்களின் பெற்றோர்களையும் ஒதுக்கித்தள்ளி நயவஞ்சக ஆண்களின் வலையில் விழாமல் பதிவுப்போலுள்ள பலரறிய திருமணம் புரிய முன்வந்து வாழ்க்கை நடத்துங்கள். இந்நாடு முன்னேறும் சமூகமும் முன்னேறும் என் இறுதி மரண சாசனம் இது என எழுதி முடித்தேன்—என்னும் நாள் எந்நாளோ?.

உடைந்த உள்ளங்கள்...! ★ ★ ★ ★ ★ ★

இளநாகன்.

பார்! பார்! பட்டணம் பார்! பம்பாய்ப் பார்! கொரியாப் போறைப்பார்! அணுகுண்டு விழுகுதுபார்! சீனாவில் கம்யூனிஸ்டைப் பார்! இந்திய நிலைமையைப் பார்! என்று கூறிப்பிழைக்கும் காலணா சினிமாக்காரன் குறல் ஒருபக்கம். பூம், பூம் என்று கூக்குறலிட்டு விரைந்து செல்லும் மோட்டார்கள் ஒருபக்கம். கிண், கிண் என்ற ஒலியுடன் ஓடும் துவிச்சக்கர வண்டிகள் ஒரு பக்கம். ஜில், ஜில் என சப்தமிட்டு பறந்தோடும் குதிரை வண்டிகள் ஒரு பக்கம் குப், குப் என்னும் கூச்சலிட்டுக் கொண்டு ஓடும் ரயில்கள் ஒரு பக்கம். இத்தனைக்கும் நடுவில் நான் சென்னை கடைத்தெருவில் சென்றுக்கொண்டிருந்தேன், அப்பொழுது ஐயா! ... என்று தயங்கினான் ஒரு என்புருக்கி நோயாளன் (க்ஷயரோகி) ஏனென்று கேட்பதற்குள் வயிறு பசிக்கிறது என்றான். ஏனப்பா உன்னைபார்த்தால் ஒரு பிச்சைக்காரனாக தோன்றவில்லையே என்றேன், தேம்பி தேம்பி அழுதுக்கொண்டு பிச்சைக்காரனான வரலாற்றை கூறத்தொடங்கினான். ஐயா! நான் பிறந்தது தஞ்சை எனது தந்தை ஒரு முற்போக்கு கொள்கையுடையவர் அவரென்னை ஆரும்படிவம் வரை தஞ்சையிலேயே படிக்கவைத்தார். பிறகு கல்லூரி படிப்புக்காக சென்னை அனுப்பப்பட்டேன். சென்னை கல்லூரியில் இடமில்லை. என் தந்தை எண்ணியிருந்த கல்லூரிகளிலெல்லாம் அவ்வாண்டு இடம்கிடைக்கவில்லை.

மறு ஆண்டு திருச்சிராப்பள்ளி கல்லூரியில் சேர்க்கப் பட்டேன் என்று கூறிவிட்டு மிகுதியாக அழுதான். அழாது அனைவற்றையும் கூறப்பா என்றேன் மெல்லிய குரலில் மீண்டும் கூறத்தொடங்கினான், கல்லூரியில் ஒரு நாடகம் நடத்தப்பட்டது அதில் நான் கதாநாயகனாக நடித்தேன். எனது வகுப்பில் படித்துவந்த கமலா கதாநாயகியாக நடித்தாள். ஆண்டு ஆரம்பத்தில் நடந்தது நாடகத்தில் காதலராக நடித்த நாங்கள் வாழ்க்கையிலும் அப்படியிருக்க கமலாவின்சம்மதம் கேட்டேன் சரியென ஒப்பினாள். ஆனால் இது கமலாவின் பெற்றோர்களுக்குப் பிடிக்கவில்லை. நானும் கமலாவும் மறுநாள் இரவு சினிமாவுக்கு சென்றோம் வழியில் அவள் என்னை நாளை நள்ளிரவு வீட்டிற்கு வரும்படி கூறினாள் ஏனென வினவினேன் நாம் இருவரும் ஊரைவிட்டு வெளியேறி வேற்றூரில் பதிவு திருமணம் செய்து கொள்ளலாமெனக் கூறினாள். அவள் பேச்சை நம்பி நானும் மறுநாள் குறித்த நேரத்திற்கு அங்கு சென்றேன். அவ்வமயம் அவள் என்னை கொள்ளைக்காரனென்றும், கற்பழிக்க வந்த மாபாவியென்றும் சப்தமிட்டாள். உடனே அண்டை அயலார்கள் ஓடிவந்து என்னைப்பிடித்துக்கொண்டார்கள் அப்பொழுது என் உள்ளத்தில் உதித்தவைபல பல பட்டணக்காதல் இதுதான் பதிவுமணம் என்றதற்கு பரிசுஇதுதான்என்பன உதித்தவற்றில்சில அப்பொழுது தான் என் உள்ளம் உடைந்தது.

பிறகு நீதிமன்றத்தில் என்னை விசாரித்து மூன்று மாத சிறை தண்டனை விதித்தார்கள். அப்பொழுது நான் என் தந்தைக்கு ஒரு முடங்கல் தீட்டினேன். அதில் எனக்கு [illegible]ர்வு ஒன்று வெகு விரைவில் இருக்கிறது என்றும் ஆகையால் நான் அதற்கான ஆக்க வேலைகளை செய்யவேண்டும் என்று குறிப்பிட்டிருந்தேன் அது பற்றி எனக்கு தாங்கள் மூன்றுமாதங்களுக்கு முடங்கல் வரைய வேண்டாமென்றும் தீட்டியிருந்தேன். சிறையிலேயே பல இன்னல்களுக்கு இலக்காகினேன், சிறையிலிருந்து வெளிவந்ததும் எனக்கு இந்நோய் வந்தது, இரயிலுக்கும் பணமின்றி கள்ளத்தனமாக இங்குவந்து சேர்ந்தேன். எனது பெயர் கலைச்செல்வன், உடனே நான் உனது தந்தை பெயர் இருளப்பதேவரா என்றேன் ஆம் தங்களுக்கு எப்படி தெரிந்தது என்று மெல்லிய குரலில் கேட்டான். ஏதோக்கூறினேன் அது உண்மையாகிவிட்டது என்று உணர்ந்தேன் பிறகு அவன் எனக்கு பால்மணி என்ற நண்பன் ஒருவன் உண்டு என்றான் இதைக்கேட்டவுடன் என் உள்ளம் உடைந்துவிட்டது. நான்தான் அந்தபால்மணி ஆனால் இதைநான் அவனிடம் கூறவில்லை. சற்றுநேரம் கழிந்தபின்னர் உடைந்த உள்ளத்தவனாய் ஊர் திரும்பினேன்.

ஓராண்டு சென்றவுடன் எனக்கு திருமணம் நடந்தேறியது நாட்கள்சில கடந்தவுடன் பால்நிலா எங்கும் பரந்திருந்தது. அப்போது நானும் என்இல்லாளும் முற்றத்தில் அமர்ந்து ஏதோ உரையாடிக்கொண்டிருந்தோம். அவ்வமயம் நான் எனது சென்னைநிகழ்ச்சியை இல்லாளுக்கு எடுத்து இயம்பினேன் அவ்வளவுதான் ஆவென அலறி வீழ்ந்தாள் என்மடி மீது அவளை ஒருவாறு தேற்றி யாது காரணம்பற்றி வீழ்ந்தாய் என்று வினவினேன் அம் மாபெரும் வீரரை இந்நிலைக்கு ஆக்கினமாபாவி நான்தான் என உடைந்த உள்ளத்தவளாய் என்னிடம் கூறினாள் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையிடுவது போல் என் நண்பன் வாழ்விற்கு களையாய் முளைத்தாயே கமலா என்றுகூறி துயரக்கடலில் மூழ்கினேன் அப்போது வெந்தபுண்ணில் வேல் விடுவதுபோல் ஒரு நரைத்த முடியினை உடைய முதியவர் ஒருவர்வந்து நான் உங்களது உரையாடலை கவனித்தேன் அந்தக்கலைச்செல்வன்தான் எனது மகன்

> "மகன்றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை
> யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்.

என்னும் வள்ளுவர் பெருந்தகையார் வாக்குக்கிலக்காக வாழவேண்டும் என்று கல்லூரி அனுப்பினேன் அதன் பலன்தான்இது வருங்காலத்தில் சீர்திருத்த சிங்கமாக திராவிடர் இயக்கத்தோழனாக தன்மானத் தமிழனாக வாழவேண்டும் என்று படிக்கவைத்தேனே பலன் இதுதானா? கல்லூரிப்படிப்பை பாழ்படுத்தி கன்னியின் காதலில் கருத்தையிழந்து என்னை இந்நிலைக்கு ஆக்கினானே என்று உடைந்த உள்ளத்தவராய் கூறினார் நான் மீண்டும் உடைந்தவனாய் துன்பக்கடலில் மூழ்கினேன் கல்லூரிமாணவன் கருத்தையிழந்து வாழ்க்கையை வளப்படுத்தாது பாழ்படுத்திக்கொண்டது எத்தனைபேர் உள்ளத்தை உடைத்துவிட்டது ஆ! உடைந்த உள்ளங்கள்.

—:—

புறநானூற்றுப் புலவர்கள்.

[சென்ற வாரத்தொடர்ச்சி]

இராம-குப்புசாமி.

★

இப்புலவர் பெருமக்கள் பருத்தி வேலிச் சீறூர் மன்னரையும், யானை யெருத்தத் திலங்கும் முடிகெழு வேந்தரையும் ஒன்றாகவே கருதியொழுகினர் யாவராயினும் உண்மையைக்கண்டு உரைத்தனர் வண்மையைக்கண்டு வாழ்த்தினர்; வெண்மையைக்கண்டு வெறுத்தனர். பிறர்க்கீயும் பெருமையில்லாத அரசரைப் "பீடில் மன்னர்" என்று குறித்து அவரைத் தங்களுடைய நாவானது பாடியதில்லை.

புலவர்கள், சிற்றரசர்கள், வேளிர்களாயினும், வள்ளல்களாயுள்ளவர்களை வாயார வாழ்த்தி, முடிவேந்தராயினும் ஈயாதோரை நாணச்செய்து தமிழ்நாட்டில் விளங்கினர் என்பதை,

"ஈயாமன்னர் நாண
வீயாது பரந்தநின் வசையில் வான்புகழே"

என்ற பிட்டங் கொற்றனைக் குறித்த அடிகளால் அறியலாம்,

புலவர்கள் தன்மானத்துடன் (Self-respect) வாழ்ந்து வந்தனர். இவர்கள், இன்மையால் இடருழந்து வாடிய இடத்தும், தன்மானம் கெடவரும் வாழ்க்கையைக் கைக்கொண்டிலர். "பெரிதே யுலகம் பேணுநர் பலரே" என்ற உறுதி படைத்த உள்ளவெறுக்கையர் அரசர்களின் கைவண்மையை நோக்கி வாழ்ந்தனரேனும் புலவர்கள், அவ்வரசர்களின் முன்னிலையில் அஞ்சியொடுங்கி அவலமுற்றழிந்தறியார். தம்மைக்காக்கும் வள்ளல்களேயாயினும் அரசர்களைப் புலவோர் தம் நண்பர்களாகவே கொண்டு உயர்வு தாழ்வெனும் யாதொரு வேற்றுமையின்றி அளவளாவி மகிழ்ந்தனர். அரசர் கோயிலைத் தமக்குரிய வீடாகவே மதித்துப் புலவர்கள் இனிதுபழகி வந்தனர். மாற்றரசர் அஞ்சியொடுங்கிக் குலைநடுங்கும் அத்தாணி மண்டபத்தின்கண் தமிழ்ப்புலவோர் பெருமிதத்துடன் அணுகுந்து தலை நிமிர்ந்து போவதும் வருவதுமாய் இருப்பர்,

பண்டைப் புலவர்களின் ஏறு போன்ற பீடு நடையைநாம் மறத்தல் இயலாது புலவர்கள், பிறர்க்குச் சிறிதும் தீங்கு விளைக்காத சீலமுடையோர், சொற்போர் நிகழ்த்தித்தம் கல்வித்திறனைக் காட்டி பெருமிதம் எய்துவர், அரசவைகளில் அணுகுந்து நடந்து தலைமை தாங்குவோர், பலவிடங்களுக்கும் சுற்றியலைந்து உலகியலை நன்கு அறிவோர்.

இப்புலவர்கள் அரசர்களிடையே புகழ்படைத்தும், அவர்கள் நன்மதிப்பையும் பெற்றிருந்ததினால், அவர்களிடைய நிகழ்ந்த பல பூசல்களைத் தீர்த்து வைத்தனர்.

புலவர்கள், வறுமையுற்று வருந்தினரேனும், பின்னர் பேருதவியாளர்களான அரசர்களை யடுத்துச்செல்வத்தில் திளைத்துப் பெருவாழ்வுஎய்தினர். தமிழையே தங்கள் தாய்மொழியாக்கிக்கொண்டிருந்தனர். தமிழரசர்களே அரசாண்டனர். [illegible]ல் அருந்தமிழும் அன்புடன் போற்றிவள[illegible]து, அரசவைகளில் முதலிடம் பெ[illegible]...

[illegible] புலவர்களிடத்தில் அன்புடன் ஒழுகியது [illegible]ல புலவர்களும் அரசர்களிடத்துப் பேரன்பினர்களாயிருந்தனர்; அவர்கள் வீரத்தையும், போர்த்தொழிலையும் வியந்து பாடியுள்ளார்கள். அரசர்களுடன் போர்க்களம் சென்று வெற்றியுண்டாக வேண்டுமென்று வாழ்த்தித் தொழுதனர். தம்மைப் புரந்த மன்னர்கள் போரில் மடிந்தால் தாமும் உலக வாழ்க்கையை வெறுத்து அந்நாட்டை விட்டகன்றனர். காட்டாக, கோப்பெருஞ்சோழன் இறந்ததை அறிந்த பிசிராந்தையார், உயிர்வாழ நினைக்காது வடக்கிருந்து அவனுடனே உயிர் விட்டார்.

"எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
செய்நன்றி கொன்ற மகற்கு"

என்ற அருங்குறளின் நுண்பொருளை அறிந்திருந்தமையால் அக்காலத்துப் புலவர்கள் செய்நன்றி யறியும் செம்மைக் குணம் படைத்த சீலர்களாயிருந்தனர், அரசியல் நீதிகளை வேண்டும்பொழுது விரித்துரைத்தனர் அவர்களின் குடும்ப வாழ்க்கையிலும் குறுக்கிட்டு வேண்டும் உதவி புரிந்து வந்தனர்.

முத்தமிழ் வல்லுநராயும், மூவறிவு படைத்தவராயும் பல கலைகளிலும் கற்றுத்துறை போகிய கலைஞராயும் விளங்கினர்.

பண்டைப் புலவர் காலத்தில் தமிழ் மக்களும் தமிழரசர்களும் குன்றின்மேலிட்ட விளக்கென விளங்கினர்.

மாயாப் புகழ் படைத்த புலவர்களின் புகழ் உலகுள்ளளவும் அழியாது நின்று நிலவுக! தமிழ்ப்புலவர்கள் வாழ்க! தமிழ் வாழ்க! புகழ் விஞ்சிப்பரப்பதாக!

26—9—50 காலை 8-மணியளவில் ஆசிரியரும், அ. இ. காதர்கான் அவர்களும் T. S. O. அவர்களை நேரில் கண்டு ஜெயங்கொண்டம் டவுன் உணவு பங்கீடுகார்டுகள் அதிகமாய் இருக்கும் இடத்தில் ரேஷன்வாங்க ஜனங்கள் நெருக்கடி அதிகமாகி 1 நாள் பூராவிலும்கூட வாங்காத நிலையை நேரில்விளக்கியதில் மற்றைய ஸ்டோர் பிராஞ்சுகளுக்கும் பிரித்து கொடுத்து கூட்டத்தை சமப்படுத்துவதாய் ஒப்புக்கொண்டார். —ஆசிரியர்.

ஃ ஃ ஃ

25—9—50 மாலை 6½ மணிக்கு ஜெயங்கொண்டம் ஸ்ரீ சாமுண்டீஸ்வரிகோவில் சன்னதியில் தி. மு கழக கூட்டம் A. மெந்துசலா அவர்கள் தலைமையில் ரத்தினசாமி K. P ராமச்சந்திரன், குடந்தை S. K. சாமி முதலியோர் சொற்பொழிவுடனும், பெரியார், அண்ணா இருவரையும் விடுதலை செய்யக்கூறியும், பெரியார் ஈ. வே. ரா., அறிஞர் அண்ணா இவர்கள் 153-A படி ரூ 700 அபராதமும் கட்டத்தவறினதினால் சிறைக்கும் அனுப்பப்பட்டதை பொதுக்கூட்டத்தில் ஏகமனதுடன் கைதட்டல்மூலம் கண்டனதீர்மானம்நிறைவேற்றினார்கள் திரளான மக்கள் கூட்டமிருந்தது. V. ராஜகோபால் நன்றிகூறலுடன் கூட்டம் 9¾-மணிக்கு முடிவுற்றது.

ஃ ஃ ஃ

23—9—50-ல் ஷியூர் ஷை சன்னதியில் தி. கழகக் கூட்டம் ப. ரு. வைத்திலிங்கம் அவர்கள் தலைமையில்கூடி பெரியாரை விடுதலைசெய்யும்படியும் 153-A படிசெய்தது சரியல்ல என கண்டனத்தீர்மானம் நிறைவேறியது.

செய்தி…

திருச்சி ஆதிதிராவிடர்களின் அ…

1950 வருடம் ஆகஸ்டு மாதத்தில் சென்னை மாகாண ஹரிஜன இலாகா உதவி டைரெக்டர் திரு. ஜி. முத்து இருளாண்டி பி. ஏ., அவர்கள் திருச்சி விஜயமும், திருச்சி ஜில்லா ஷெடியூல்டு காஸ்ட் பெடரேஷன் பொது காரியதரிசி டாக்டர் D. T. ராஜன் அவர்கள் பேட்டியும்.

திருச்சி வரகனேரி பேடிஸன் லேபர் பள்ளியையும், மூ. தா. திருத்தலையூர் உயர்தர பள்ளியையும் மத்தியதர பள்ளியாக மாற்ற வேண்டுகோள். மற்றும் கீழ்க்கண்ட முக்கிய விஷயங்களைப்பற்றி ஒரு நீண்டதோர அபிப்ராயம் தெரிவிக்கப்பட்டது.

1. திருச்சி, வரகனேரி பேடிஸன் லேபர் பள்ளி நகரத்தின் மத்தியில் இருப்பதையும் டி பள்ளியைத் தவிர சுற்றுவட்டாரங்களில் நகரசபை ஆரம்பபள்ளிகள் இருப்பதால் இவ்லேபர் பள்ளி ஆரம்ப பள்ளியாக இருப்பதைவிட மத்தியதர பள்ளியாக இருப்பது மிக பயன்தரகூடியதாக இருக்குமெனவும் அப்படி சாத்தியப்படாவிடில் இந்நகரத்திலிருந்து படிப்பு வாசனையே யறியாத பாமர மக்கள் வாழும் கிராமங்களுக்கே மாற்றிவிட வேண்டுமெனவும், மூ. தா. திருத்தலையூர் உயர்தர பள்ளியை ஒரு மத்தியதர பள்ளியாக மாற்றி சுமார் 10 மைல் விஸ்திரணமுள்ள இடங்களில் வசிக்கும் மக்களுக்கு உயர்தர கல்வி அளிக்க வசதியளிக்குபெனவும்,

2. அநேக பள்ளிகளில் உதவி ஆசிரியர்கள் இன்றி கஷ்டமேற்படுவதால் உடனடியாக அதிகமான ஆசிரியர்களை சாங்ஷென் செய்யவேண்டுமெனவும்,

3. அநேக கிராமங்களில் குடிநீர் வசதி. வழிபாதை வசதியின்றி கஷ்டப்படுவதால் தாலூகாவாரியாகஇணறு வழிபாதை இல்லாதவைகளை கணக்கெடுத்து அவசியமான இடங்களுக்கு உடனடியாக சாங்ஷென் செய்ய வேண்டுமெனவும்,

4. குடியிருப்பு மனைகள் அடமானம் செய்யும் விஷயத்தில் மிக்க காலதாமதமாக யிருப்பதால் அவைகளை அடமானம் செய்யும் விஷயத்தில் பிரத்தியேகமான கவனம் செலுத்தவேண்டுமெனவும்,

5 நகரசபைகளிலும், கிராமங்களிலும் வசிக்கும் மக்களுக்கு சொற்பத்தொகையில் வீடு கட்டிக்கொடுக்க வேண்டுமெனவும்,

6. ஹோட்டல் நுழைவு, ஆலயப்பிரவேசம், (சமூக தடை நீக்கும் சட்டம்) இவைகள் சரியான முறையில் அமுல் நடத்தப்படாததை விளக்கியும் கிராமங்களில் தாழ்த்தப்பட்டோருக்கு என தனி இடம், தனிபாத்திரம் வைக்கப்பட்டிருப்பதை விளக்கி அப்படிப்பட்ட ஹோட்டல்காரர்களின் பேரில் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும்,

7. ஒவ்வொரு ஜில்லா வெல்பேர் ஆபீஸர்களுக்கு அவசியம் ஓர் கார் கொடுத்து உதவ வேண்டுமெனவும், நில அடமானம் செய்யும் அதிகாரத்தை டி வெல்பேர் ஆபீஸர்களுக்கு கொடுக்கவேண்டுமெனவும். மதுவிலக்கு இலாகாவை ஓர் தனி போலீஸ் அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதுபோல் ஒவ்வொரு வெல்பேர் ஆபீஸர்களுக்கும், அவர்கள் பார்வையில் சுமார் 6 போலீஸ் கான்ஸ்டேபிள்கள் கொடுக்க வேண்டுமெனவும் இது சம்பந்தமாக பிரத்தியேக கவனம் செலுத்தவேண்டுமெனவும் ஓர் சில இடங்களில் ஓர் சில தெரிந்தவர்கள் ஹோட்டல், கோவில் முதலிய இடங்களுக்குச் சென்றால் பொய்யாக திருட்டுக் குற்றம் சாட்டியும், கம்யூனிஸ்ட் என்று சொல்லி மிரட்டியும் கொடுமைபடுத்தி வருவதை சர்க்கார் பிரத்தியேகமாக கவனம் செலுத்தி போதிய பாதுகாப்பு தரவேண்டுமென கேட்டுக்கொள்வதற்கிணங்க கனம் டிப்டி டைரக்டர் அவர்கள் மேற்கண்ட குறைகளை நிவர்த்தி செய்வதற்கு ஆவன செய்வதாகக் கூறியுள்ளார்கள்.

D. T. ராஜன்
திருச்சி ஜில்லா ஷெடியூல்டு காஸ்ட் பெடரேஷன்,
பொதுக்காரியதரிசி
19—9—50.

ஃ ஃ ஃ

15—9—50 இரவு மதுரை புட்டுதோப்பு மைதானத்தில் நடந்த பொதுகூட்டத்தில் ஸ்ரீ வைத்தினதய்யர் அவர்கள் எம். எல். ஏ நடத்திய பிரசங்கத்தின் விபரம். எல்லா அம்சங்களும் நிரைந்த நாது நாட்டில் ரேஷன் கட்டுப்பாட்டினால்தான் கொடுமை. பஞ்சம் ஏற்பட்டு ஏழை—விவசாயி—பாட்டாளி—தொழிளாளர்கள் பாதிக்கப்பட்டு நாளுக்குநாள் அரிசி பிளாக்மார்கட்டில் விலை ஏறுகிறதென்றும் ரேஷன் கட்டுப்பாட்டை எடுத்துவிட்டால், பிளாக்மார்க்கெட் தலைகாட்டாது என்றும் அவசியமானால் ஜில்லா—நகரம் போன்ற இடங்களில் ரேஷன் கட்டுப்பாடும் கிராமாந்திரங்களில் நிவாரண கடைகள் இருந்தால் போதுமென்றும்தான் சர்க்காரிடம் எவ்வளவோ சொல்லியும் கேட்பாரில்லை என்று பெருங் கூட்டத்தில் நீண்டநேரம் பிரசங்கத்தை முடித்தகர்.

ஃ ஃ ஃ

திருமணம்

8—9—50-ல் உ. தா. ஆயிரக்கலவன் கிராமத்தில் மேட்டுப்பாளையம் திருச்சி மாவாட்ட கழக உறுப்பினர் M. கோவிந்தசாமி அவர்கள் தலைமையில் திரு. கிருட்டிண சாமி திருமதி. பாக்கியலெட்சிமி வாழ்க்கை ஒப்பந்தம் நிறைவேறியது. அவ்வமயம் L. அணைக்கரை A. தங்க ராசனவர்கள், குடந்தை S. K. சாமி அவர்கள் திருந்திய திருமணம் என்பது குறித்து சொற்பொழிவாற்றினர்கள். G. ராகவன் நன்றிகூறினர்.

Printed by A. P. Ramaswami Pillai at the Sri Rathna Press, (Branch) Jayankondacholapuram.
Edited and Published by M. Bhaskaranar, 17, Ketchari Street, Jayankondacholapuram.